வராமல் இருக்கலாம். ஆகவே, அவையில் வைப்பதும் தமிழில் வைத்துவிட்டால் இந்தப் பிரச்னை வராது. அதற்கு ஏற்பாடு செய்தால் நன்றி உடையவனாக இருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர்கள் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னதையும், திரு. லத்தீப் அவர்கள் சொன்னதையும் நான் உணர்கிறேன். நீங்கள் சொன்ன கருத்தை நான் செயலாளரிடம் தெரிவித்து, இனிமேல் தமிழிலே தரவேண்டும், விரும்புகிறவர்களுக்கு ஆங்கிலத்தில் தரவேண்டும், என்கிற வகையில் ஏற்பாடு செய்கிறேன். அவையில் உறுப்பினர்களுக்காக மேசை மீது வைப்பதும் தமிழில் இருக்க வேண்டும் என்றும் சொல்கிறேன். இந்த முறை நாளையதினம் முதல் பின்பற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

(இ) உறுப்பினர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுப்பது பற்றி.

திரு. து. இராமசாமி: தலைவரவர்களே, சட்டசபை எதிர்கட்சிகளுடைய அலுவலகங்களிலே தொலைபேசி வசதி இல்லாமல் இருக்கிறது. நாடாளுமன்றத்திலே எதிர்க்கட்சி அலுவலகங்களுக்கு எல்லாம் தொலைபேசி வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். அதைப்போன்று நம்முடைய மாநிலத்திலும் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டில் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு டெலிபோன் டைரக்டரி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதையும் உறுப்பினர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: சார், மாண்புமிகு உறுப்பினர் சொல்வது மிக முக்கியமான விஷயம். இங்கே அங்கத்தினர்கள் அறைக்கே டெலிபோன் இருக்கும்போது கட்சி அலுவலகங்களுக்கு இல்லாமல் இருப்பது வருந்தத்தக்கது, ஆபீசில் பல வேலைகள் நடைபெறுகின்றன. ஆகவே, அங்கே முக்கியமாகத் தேவைப் படுகிறது. ஆபீஸ் ஓல்டு ஆஸ்டலில் இருக்கிறது. ஒரு எக்ஸ்டன்ஷன் லைனாவது உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: நானும் அதைத் தொடர்ந்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கூறியதை வழிமொழிகிறேன் என்று சொல்லிவிட்டால் போதும். நான் புரிந்துகொண்டேன். தயவுசெய்து உட்காருங்கள். பாராளு

மன்றத்தில், பாராளுமன்ற கட்டடத்திற்குள்ளேயே இருக்கின்ற கட்சி அலுவலகங்களுக்கு டெலிபோன் வசதி செய்து கொடுக்கிறார்கள்; வெளியே இருக்கின்ற அலுவலகங்களுக்கு கிடையாது, நானும் அதை பார்த்திருக்கிறேன். ஆனால் நம்முடைய மாநிலத்தில் கட்சி அலுவலகங்கள் சட்டமன்ற கட்டடத்திற்கு வெளியே இருக்கின்றன. இருந்த போதிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சரவர்களுடன் கலந்துபேசி, ஆவன செய்ய முயற்சி செய்கிறேன். ஏனென்றால் இது என்னுடைய சட்டமன்றத் துறை சம்பந்தப்பட்டதல்ல; பொதுப்பணித் துறையைச் சேர்ந்தது. ஆகையால் அவர்களிடம் சொல்லித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது இங்கே இருக்கிறார்களே, அதற்கு அவர்கள் இப்போதே பதில் சொல்லி விடலாம்.

<u>திரு. து. இராமசாமி</u> : தலைவரவர்களே, நாடாளு மன்றத்திலே எல்லா எதிர்க்கட்சிகளுக்கும் நாடாளுமன்ற கட்டடத்திற்குள்ளேயே அலுவலக அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் எதிர்க்கட்சிகளின் அலுவலகம் செயலகத்திலே இல்லை; இடம் ஒதுக்கப்பட வில்லை. ஆகையால் கட்சி அலுவலகங்கள் வெளியே இருந்தாலும், நாடாளு மன்றத்திலே செய்து கொடுத்திருப்பதைப்போல டெலிபோன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஒரு நல்ல முடிவை அறிவிப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : தலைவரவர்களே, ஆளும் கட்சிக்கே எந்த இடம் என்று இல்லாமல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை இந்த அரசு பரிசீலனை செய்யும்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மாணவர்களுக்கும், போலீசாருக்கும் சென்னையில் ஏற்பட்டுள்ள மோதல் குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம் . . . .

<u>திரு. சி. ஆறுமுகம்</u> : தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சனை.